இனிமையான குழந்தைகளே! தேகத்தின் கூடவே அனைத்து நினைவுகளையும் மறந்து, தந்தை யார்? எப்படிப்பட்டவராக இருக்கின்றார்? என்பதை மிகச்சரியாக தெரிந்து கொண்டு, தன்னை பிந்து என நினைத்து பிந்துவாகிய தந்தையை நினைவு செய்யுங்கள்.

கேள்வி: வேறு யாரும் அளிக்க முடியாத எந்த ஒரு ஞானம் இந்த நேரத்தில் உங்களுக்கு தந்தை யிடமிருந்து மட்டுமே கிடைக்கின்றது?

பதில்: கணவன் - மனைவி கூடவே இருந்து குடும்ப விவகாரத்தை கவனித்தாலும் தூய்மையாக இருங்கள். இந்த ஞானம் இப்பொழுது இந்த நேரத்தில் தந்தை உங்களுக்கு கொடுக்கின்றார். வேறு யாரும் இந்த ஞானத்தை கொடுக்க முடியாது. நீங்கள் 5 விகாரங்களைத் தானம் செய்ய வேண்டும். ஆனால் முக்கியமானது காமம். அதன் மீது முழுமையாக வெற்றி அடைய வேண்டும். சர்வ சக்திவான் தந்தையின் நினைவு மற்றும் ஸ்ரீமத்படி நடப்பதன் மூலமே இந்த சக்தி கிடைக்கும்.

பாடல்: துக்கமானவர்களின் மீது கருணை காட்டுங்கள் ............

ஓம் சாந்தி. அதே தந்தை அமர்ந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார். யார் அந்த தந்தை? என்பதை குழந்தைகள் அறிந்திருக்கின்றீர்கள். குழந்தைகளின் எதிரில் தந்தை அமர்ந்திருக்கின்றார். இப்பொழுது குழந்தைகளாகிய உங்களது புத்தியின் தொடர்பு எல்லையற்ற தந்தையிடத்தில் இருக்கின்றது. புத்தியின் தொடர்பை இப்பொழுது எல்லைக்குட்பட்ட தந்தையிடமிருந்து நீக்க வேண்டும். முழு உலகின் சொந்த பந்தங்கள் அது தேக சம்மந்தமோ, உலகீய சம்மந்தமோ அனைத்தையும் மறக்க வேண்டும். இது தந்தையிடமிருந்து கிடைக்கும் கட்டளையாகும். தந்தை குழந்தைகளை ஒரு பொழுதும் மறப்பதில்லை. தந்தை கூறுகின்றார் - பக்தி மார்க்கத்திலும் கூட பக்தர்களாகிய உங்களை நான் பராமரித்து (காப்பாற்றி) வந்தேன். ஆனால் நாடகப்படி குழந்தைகளாகிய நீங்கள் மறந்தே ஆக வேண்டும். மறக்க வைப்பது மாயையாகும். நான் ஆத்மா என்பதையும் இராவணன் மறக்க வைத்து விடுகின்றான். தேக அபிமானியாக ஆக்கி விடுகின்றது. இது குழந்தைகளாகிய உங்களது பாகமாகும். நீங்கள் அங்கு தந்தையை மட்டும் மறந்து விடுகின்றீர்கள் என்பது கிடையாது. ஆனால் அவர் யார்? அவர் எப்படிப்பட்டவர்? என்ற அந்த தந்தையின் நினைவு மற்றும் சுகம் கொடுப்பவரின் ஞானத்தை மறந்து விடுகின்றீர்கள்.

பாபா கல்ப கல்பத்திற்கு வருகின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். பாபா எவ்வாறு இருக்கின்றார்? என்பதையும் புத்தியில் தாரணை செய்ய வேண்டும். மனிதர்கள் சிவலிங்கத்தின் மிகப் பெரிய சித்திரத்தை உருவாக்கி விட்டனர். மற்ற அனைத்து சித்திரங்களும் சரியானதாகும். பிரம்மா, விஷ்ணு மற்றும் சங்கரின் சித்திரங்களும் சரியானதாகும். கோயில்களில் பூஜிக்கப்படுகின்றன. ஆனால் பரம்பிதா பரமாத்மாவின் பெயர், உருவம், தேசம், காலம் என்ன? என்பதை மறந்து விட்டனர். சித்திரத்தையும் (ரூபத்தை) மறந்து விடுகின்றனர். ஆத்மா பிந்து ரூபத்தில் இருக்கின்றது, நட்சத்திரத்தைப் போன்று பிந்துவாக இருக்கின்றது பிருகுட்டியின் நடுவில் இருக்கின்றது என்பதை குழந்தைகளாகிய உங்களுக்குப் புரிய வைக்கப்படுகின்றது. நாம் ஆத்மாக்கள்,

சரீரத்தில் பிருகுட்டி யின் நடுவில் ஆத்மாவாகிய எனது ஸ்தானம் இருக்கின்றது என்பதை குழந்தைகள் அறிந்திருக் கின்றீர்கள். இதனை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். மிகவும் சூட்சுமமான பிந்துவைப் போன்று இருக்கின்றது. பரம்பிதா பரமாத்மாவும் இவ்வாறு பிந்துவாகத் தான் இருப்பார் என்பதையும் அறிந்திருக்கின்றனர். அவரே வந்து புரிய வைக்கின்றார் - நானும் பிந்துவாக இருக்கின்றேன். ஆனால் மனிதர்கள் பெரிய ரூபமாக சிவலிங்கமாக உருவாக்கி விட்டனர். புத்தரையும் மிகப் பெரிய உருவமாக உருவாக்குகின்றனர். பாண்டவர்களின் சரீரத்தையும் பக்தி மார்க்கத்தில் மிகப் பெரியதாக உருவாக்கு கின்றனர். பக்தி மார்க்கத்தில் பெரிய சித்திரங்கள் இருக்கின்றன. ஞான மார்க்கத்தில் சிறிய பொருட் களாக இருக்கின்றது. நான் பிந்துவாக இருக்கின்றேன் என்று பரமாத்மா கூறுகின்றார். ஆங்காங்கே பெரிய லிங்கத்தையும் வைக்கின்றனர். இல்லையெனில் பிந்துவிற்கு பூஜை எப்படி நடைபெறும்? பூஜைகள் கண்டிப்பாக பெரிய பொருட்களுக்குத் தான் நடைபெறுமல்லவா! உங்களுக்கு இப்பொழுது பிந்து ரூபம் என்று புரிய வைக்கப் பட்டிருக்கின்றது. இந்த விசயங்களை மனிதர்களால் புரிந்து கொள்ள முடியாது. குழந்தைகளாகிய உங்களுக்கும் முதலில் இது புரியாமல் இருந்தது. இப்பொழுது பரிபக்குவ (முதிர்ச்சி அடைந்த) நிலை ஏற்படும் பொழுது இது உண்மையான விசயம் என்று புரிந்து கொள்கின்றீர்கள். ஆரம்பத்திலிருந்து பாபா புரிய வைத்தாலும் நாம் புரிந்து கொள்ளவில்லை. ஏனெனில் பிந்து என்று எந்த பொருளும் கிடையாது. நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. பரம்பரையாக நாம் சிவலிங்கம் என்று கூறி வந்தோம். பிறகு இது என்ன? ஆக தந்தை புரிய வைக்கின்றார் - இதுவும் தவறாகும். நான் உங்களது தந்தையாக இருக்கின்றேன், நான் பிந்துவாக இருக்கின்றேன். உங்களது ரூபமும் பிந்துவாகும். ஆனால் பூஜை போன்றவற்றிற்காக பெரிய லிங்கமாக உருவாக்கு கின்றனர். ஆத்மாக்களின் ரூபத்தையும் சாலிகிராமாக உருவாக்குகின்றனர். ஆனால் அவ்வாறு கிடையாது. ஆத்மா அந்த அளவிற்கு பெரியதாக இருக்க முடியாது. ஆத்மாவைப் பார்ப்பதும் மிகவும் கடினமாகும். இது புரிந்து கொள்வதற்கு மிகவும் ஆழமான விசயமாகும். ஆத்மாவும் பிந்து ரூபத்தில் இருக்கின்றது. இந்த சிறிய ஆத்மாவில் 84 பிறப்பின் பாகம் இருக்கின்றது. ஒரு விநாடியைப் போன்று மற்றொரு விநாடி இருக்காது. 84 பிறப்பின் பாகமானது அனைத்தும் ஒரு சிறிய ஆத்மாவில் அடங்கியிருக் கின்றது. இது மிகவும் இயற்கையான விசயமாகும். முழு பாகமும் பிந்துவில் இருக்கின்றது. அந்த நாடகத்திலும் நடிப்பு நடிக்கக் கூடியவர்களிடத்தில் முழு பாகமும் இருக்குமல்லவா! அது சிறிய பாகமாகும். இந்த 84 பிறப்புகளின் பாகத்தையும் நல்ல முறையில் புரிந்து கொள்ள வேண்டும்.. பிறகு புரிய வைப்பதற்கும் மிகப் பொருந்தும் வகையில் யுக்தி தேவை. இவ்வளவு சிறிய பிந்துவாக இருக்கின்றது, எவ்வளவு சக்தி நிறைந்ததாக இருக்கின்றது! அவரையே பரம்பிதா பரமாத்மா என்று கூறப்படுகின்றது. ஆத்மாக்களாகிய நீங்கள் அவரிடத்தில் நினைவின் தொடர்பு வைப்பதன் மூலம் மாஸ்டர் சர்வசக்திவான் ஆகின்றீர்கள். மாயையின் மீது வெற்றியடைந்து ஆடாத, நிலையான சுகம், சாந்தியான இராஜ்யம் செய்கின்றீர்கள். எவ்வளவு புரிந்து கொள்ள வேண்டிய விசயங்களாக இருக்கின்றது!

இது படிப்பாகும். மிகவும் எளிதானதும் கூட. இதனை தந்தை மட்டுமே புரிய வைக்க முடியும். இவ்வளவு சிறிய பொருள் ஆனால் எவ்வளவு பெரிய பெயரை

வைக்கின்றனர் - ஞானக்கடல். மனித சிருஷ்டியின் விதை ரூபமானவர், சைத்தன்யமாக இருக்கின்றார், சத்தியமானவர், அழிவற்றவர் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். அவ்வாறு கூறிக் கொண்டு வந்தாலும் அவர் எவ்வாறு இருக்கின்றார்? என்பது யாருடைய புத்தியிலும் வருவது கிடையாது. குணங்களைப் பற்றி அதிகமாகப் பாடுகின்றீர்கள். இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் தந்தையின் எதிரில் அமர்ந்திருக் கின்றீர்கள். அறிந்து கொண்டீர் கள். ஆத்மாக்கள் எதிரிலேயே இருக்கின்றீர்கள். அனைத்து ஆத்மாக் களும் சகோதரர் களாகவே இருக்கின்றீர்கள். எவ்வளவு சிறிய சிறிய பிந்துவாக இருக்கின்றீர்கள் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். நாம் உருவாக்கி யிருக்கும் மூலவதனத்திற்கான சித்திரத்தில் பிந்து ரூபமாகவே காண்பிக் கின்றோம். ஆகாயத்தில் எவ்வாறு நட்சத்திரங்கள் இருக்கின்றதோ அதே போல் மகத்தத்துவத்திலும் நாம் நட்சத்திரத்தைப் போன்று அவரவர்களது பிரிவில் நிலைத்திருப்போம். சிறிய சிறிய நட்சத்திரங்களால் கல்ப மரம் உருவாக்கப் பட்டிருக்கின்றது. அங்கிருந்து பிறகு ஆத்மாக்கள் வருகின்றன. நடிப்பு நடிப்பதற்காக சரீரத்தை தாரணை செய்கின்றன. வரிசைக் கிரமமாக எவ்வாறு வருகின்றன என்பதைப் பற்றி புத்தி வேலை செய்ய வேண்டும். ஒவ்வொரு தர்மத்தின் பிரிவும் தனித்தனியாக இருக்கும். தந்தை உதாரணம் கொடுத்து புரிய வைக் கின்றார். ஆலமரத்திற்கான உதாரணத் தையும் புரிய வைக்கின்றார். ஹிந்தி அநேக இடங்களில் இருப்பதால் குழந்தைகளும் ஹிந்தி மொழியில் புரிய வைக்க வேண்டியிருக்கும். பரம்பிதா பரமாத்மாவும் ஹிந்தி மொழியில் தான் புரிய வைக்கின்றார். இன்றைய நாட்களில் ஆங்காங்கே அதற்கான பிரச்சாரமும் செய்து கொண்டிருக்கின்றனர். ஒரே மொழி ஏற்படுவது கடினமாகும். பரம்பிதா பரமாத்மா அனைத்து மொழிகளையும் அறிந்திருப்பார் என்று சிலர் நினைக்கின்றனர். ஆனால் அவ்வாறு இருக்க முடியாது. அளவற்ற, அநேக மொழிகள் இருக்கின்றன. அதனைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது. பரம்பிதா பரமாத்மா எதையும் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை. அவர் முந்தைய கல்பத்தில் எந்த மொழியில் புரிய வைத்தாரோ அதில் தான் புரிய வைக்கின்றார். மற்ற மொழிகளை ஒவ்வொருவரும் படிக்க வேண்டியிருக்கின்றது. தந்தை படிக்க வேண்டியிருக்குமா என்ன? ஆரம்பத்திலிருந்து ஹிந்தி நடைபெறுவதை நீங்கள் பார்க்கின்றீர்கள். அனைவரும் ஹிந்தி கற்றுக் கொண்டு வருகின்றனர். பாரதத்தில் ஹிந்திக்கான பிரச்சாரம் இருக்கின்றது. தந்தையும் ஹிந்தியில் புரிய வைக்கின்றார். பிறகு ஒவ்வொருவரும் தங்களது மொழியில் மொழிபெயர்த்து மற்றவர்களுக்கும் புரிய வைக்க வேண்டியிருக்கும். தந்தை மற்றும் தந்தையின் படைப்புகளைப் பற்றி அனைவருக்கும் புரிய வைக்க வேண்டும். அனைவருக்கும் சக்கதி கொடுக்கும் வள்ளல் ஒரே ஒரு தந்தை ஆவார். தந்தை வந்திருக்கின்றார் என்பதை அனைவரும் அறிந்து கொள்வார்கள். நான் பாரதத்தில் தான் வருகின்றேன் என்று தந்தை கூறுகின்றார். பாரதம் எனது பிறப்பிடமாகும். சிவன் கோயில், தேவி தேவதைகளின் கோயில்களும் இங்கு தான் இருக்கின்றன. தேவி தேவதைகளின் இராஜ்யமும் பாரதத்தில் தான் ஏற்படுகின்றது. தந்தையும் பாரதத்தில் தான் வருகின்றார். தேவி தேவதைகளின் தர்மத்தின் ஸ்தாபனை இங்கு தான் செய்திருந்தார். ஆக கோயில்களும் இங்கு தான் தேவை. மற்றவர்களுக்கு இந்த அளவிற்கு கோயில்கள் இருக்காது. இங்கு அதிகமான கோயில்கள் உள்ளன. வீட்டிற்கு வீடு லெட்சுமி நாராயணன் சித்திரம், இராதை கிருஷ்ணனின் சித்திரம், இராமர் சீதையின் சித்திரம் வைக்கின்றனர்.

ஏனெனில் பாரதத்தில் இருந்து விட்டுச் சென்றனர். ஆனால் அவர்கள் இராஜ்யத்தை அடைந்தது எப்படி? என்பதை மறந்து விட்டனர். சைத்தன்யத்தில் இராஜ்யம் செய்து விட்டுச் சென்றனர். லெட்சுமி நாராயணன் வைகுண்டத்தின் மகாராஜா மகாராணியாக இருக்கின்றனர். அவர்கள் இராஜ்யம் செய்து எத்தனை ஆண்டுகள் ஆனது என்பதையும் அறிந்திருக்கின்றீர்கள். கிறிஸ்துவிற்கு முன் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தேவி தேவதைகளின் இராஜ்யம் இருந்ததாக கூறுகின்றனர். ஆக கிறிஸ்துவிற்குப் பின் 2 ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றதல்லவா! ஆக யார் இவ்வாறு பேசுகின்றார்களோ அவர்களுக்கு இதன் மூலமாகவே புரிய வைக்க வேண்டும். கிறிஸ்துவிற்கு முன் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தேவி தேவதைகளின் இராஜ்யம் இருந்தது அதாவது சொர்க்கம் இருந்தது என்று கூறுகின்றனர். கிறிஸ்துவும் அந்த சொர்க்கத்தில் இருந்தார் என்பது கிடையாது. அவ்வாறெனில் கிறிஸ்தவர்கள் எங்கிருந்தனர்? என்று கேட்கின்றனர். அதாவது அவர்களது ஆத்மா எங்கு இருந்தது? இஸ்லாமியம், பௌதம், கிறிஸ்தவம் போன்ற ஆத்மாக்கள் அனைவரும் எங்கிருந்தனர்? இதனை புரிய வைப்பது மிகவும் எளிதாகும். அவர்கள் அனைவரும் நிர்வாண்தாமம் அதாவது நிராகார உலகில் இருந்தனர். நிராகார உலகமும் இருக்கின்றது. உலகம் எனில் அதிகமானவர்கள் வசிக்கக் கூடியவர்களாக இருப்பர். அனைத்து ஆத்மாக் களும் வசிக்கக் கூடிய மகத்தத்துவம் என்ற நிராகார உலகம் ஆகும். தேவி தேவதைகளின் அனைத்து ஆத்மாக் களும் இந்த நேரத்தில் ஆஜர் ஆகியிருக்கின்றது என்பது குழந்தைகளாகிய உங்களது புத்தியில் இருக்கின்றது. அதனால் தான் தந்தை வந்திருக்கின்றார், மீண்டும் தேவி தேவதா தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றார். எந்த தர்மம் வந்தாலும் முதலில் மிகவும் சிறியதாக இருக்கும். சிறிய சிறிய கிளைகள் வெளிப்பட்டு முடிவடையும் பொழுது தான் உங்களது இந்த அஸ்திவாரமும் முடிவடைகின்றது.

விதை மற்றும் மரத்தின் ரகசியத்தைப் புரிய வைப்பது மிகவும் எளிதாகும். மனித உலகின் மரமானது அதிக தர்மங்களினால் ஆனதாகும். இப்படிப்பட்ட தர்மம் இருந்ததாகவும், இப்படிப்பட்ட தர்மம் இல்லையென்றும் நினைக் கின்றனர். இப்பொழுது சிறிய சிறிய தர்மங்களும் வெளிப்படுகின்றன. முன்பு இல்லையல்லவா! சிறிய சிறிய கிளைகள் இப்பொழுது வெளிபடுகின்றது. இதனை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். வேறு யாரும் அறிந்திருக்கவில்லை. ஆத்மா மற்றும் பரமாத்மாவின் பிந்து ரூபத்தை அறிந்திருக்கவில்லை. இப்பொழுது பாபா வந்து குழந்தைகளாகிய உங்களுக்குப் புரிய வைத்திருக்கின்றார். பாபா, நாங்கள் உங்களது குழந்தைகள் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். கல்பத்திற்கு முன்பும் உங்களை சந்தித்திருந்தோம். உங்களது குழந்தைகளாக ஆகியிருந்தோம். தந்தையின் ஆஸ்தி அடைவதற்காகவே குழந்தைகளாக ஆகியிருக்கின்றோம். தந்தை கூறுகின்றார் - நீங்கள் என்னுடையவர்கள், அதாவது தத்தெடுத்திருக்கின்றேன். முகவம்சத்தினர்களாக (வாய் வழி ஞானம் கேட்டு) ஆகியிருக் கின்றீர்கள். நீங்கள் அனைவரும் தத்தெடுக்கப்பட்டவர்கள். பாபாவும் பிரம்மாவின் வாயின் மூலமாகப் புரிய வைக்கின்றார் - ஆத்மாக்களாகிய நீங்கள் என்னுடையவர்கள். ஆத்மாக்களாகிய நீங்களும் பாபா, நீங்கள் பிரம்மாவின் உடலில் வந்து தனது அறிமுகத்தைக் கொடுத்திருக்கின்றீர்கள், நாங்கள் உங்களுடையவர்களாக இருக்கின்றோம் என்று கூறுகின்றீர்கள். பாபா என்று கூறுவதன் மூலமாக ஆஸ்திக் கான

நறுமணம் வர வேண்டும். குழந்தைகள் தான் அவ்வாறு கூற முடியும். இது இல்லற மார்க்கமாகும். சந்நியாசிகளின் சீடர்களாக ஆகின்றனர், ஆனால் அவர்கள் தந்தை குழந்தைகளாக ஆவதில்லை. தந்தையிடமிருந்து ஆஸ்தியானது பிறப்புரிமையாக கிடைக்கின்றது. நாங்கள் இவரை குருவாக ஏற்றியிருக்கின்றோம் என்று அவர்கள் கூறுவர். குருவிடமிருந்து பிறப்புரிமைக்கான ஆஸ்தி கிடைக்காது. அவர்கள் சொத்தை விட்டு விட்டு காட்டிற்குச் சென்று விடுகின்றனர். அவர்களால் ஆஸ்தியைக் கொடுக்க முடியாது. அவர்கள் துறவற மார்க்கத்தைச் சார்ந்தவர்கள். தந்தை ஆஸ்தியைக் கொடுக்கின்றார். அவர்களிடமிருந்து எதுவும் கிடைப்பதில்லை. காட்டிற்குச் சென்று விட்டால் சந்நியாசி என்று கூறப்படுகின்றனர். நீங்களும் சந்நியாசி என்று கூறப்படுகின்றீர்கள். அவர்கள் ஹடயோகி சந்நியாசிகள். நீங்கள் இராஜயோகி சந்நியாசிகளாக இருக்கின்றீர்கள். சந்நியாசி என்றால் 5 விகாரங்களை தியாகம் செய்யக் கூடியவர்கள். அதனை நீங்கள் தியாகம் செய்கின்றீர்கள். மேலும் தூய்மையான உலகிற்குச் சென்று விடுகின்றீர்கள். அவர்கள் தியாகம் செய்கின்றனர், ஆனால் தூய்மையான உலகிற்குச் செல்வதில்லை, தூய்மை இல்லாத இந்த உலகிலேயே இருக்கின்றனர்.

ஆக ஆத்மா எவ்வளவு சிறியதாக இருக்கின்றது என்று தந்தை புரிய வைக்கின்றார். இவ்வளவு சிறிய பொருளில் எவ்வளவு சக்தி இருக்கின்றது, அழிவற்றதாகவும் இருக்கின்றது. அந்த தந்தை இந்த சரீரத்தின் மூலமாக புரிய வைக்கின்றார். உங்களது ஆத்மா புரிய வைக்கின்றது. தந்தை கூறுகின்றார் - நான் ஆத்மா வருவதே கலியுகத்தின் கடைசியிலாகும். தமோ பிரதானம், தூய்மை இழந்துவிடு கின்றனர். சங்கமம் ஏற்படும் பொழுது தான் என் நினைவும் வருகின்றது. அப்பொழுது தான் நானும் வருகின்றேன், விநாசத்திற்கான அடையாளங்களும் பார்க்க முடிகின்றது. அதனைக் கண் கூடாக பார்க்கின்றீர்கள். இப்பொழுது உங்களுக்கு அறிவு கிடைத்திருக்கின்றது. அதனை மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும். இப்பொழுது கலியுகத்தின் கடைசியாக இருக்கின்றது. யாதவர்கள், கௌரவர்கள், பாண்டவர்களும் உள்ளனர். மகாபாரத யுத்தமும் இருக்கின்றது. உண்மையில் அந்த நேரத்தில் இராஜயோகத்தையும் கற்றிருந்தார்கள். பாண்டவர்கள் வெற்றியடைந்தனர். யாதவர்கள், கௌரவர்கள் அழிந்து விட்டனர். சொர்க்கத்தில் ஒரே தர்மம் மட்டுமே இருக்கும். அநேக தர்மங்கள் அழிந்து விடும். இவ்வாறு தந்தை அமர்ந்து புரிய வைக்கின்றார். பாபாவின் இந்த இராஜயோகக் கல்வியின் மூலம் நாம் தேவி தேவதைக்கான பதவியை அடைகின்றோம் என்பதை குழந்தைகள் அறிந்திருக்கின்றீர்கள். நாம் நரனிலிருந்து நாராயணன் ஆவதற்கான முயற்சி செய்து கொண்டிருக்கின்றீர்கள். தந்தையின் வாரிசாக கண்டிப்பாக ஆவோம், சிம்மாசனதாரியாக கண்டிப்பாக ஆவோம். பிறகு யார் எவ்வளவு முயற்சி செய்கின்றார்களோ அந்த அளவிற்கு பதவி அடைகின்றனர். முயற்சியை மறைக்க முடியாது, அவர்கள் மிகவும் போதையுடன் இருப்பார்கள். முதன் முதலில் உறுதிமொழி செய்வார்கள். தந்தையின் பிறப்பிற்குப் பிறகு ரக்ஷா பந்தன். தந்தையை அறிந்திருக்கின்றீர்களெனில் முதலில் உறுதி மொழி செய்ய வேண்டும். காமம் மிகப் பெரிய எதிரி என்று தந்தை கூறுகின்றார். ஐந்து விகாரங்களை தானம் செய்ய வேண்டும். ஆனால் முதன் முதலில் வருவது காமமாகும். இதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். மனைவி கூடவே இருந்தாலும், குடும்ப விவகாரத்தில் இருந்தும் தூய்மையாக இருப்பதில் தான்

முயற்சி இருக்கின்றது. சர்வசக்திவான் தந்தையை நினைவு செய்வது மற்றும் அவரது ஸ்ரீமத்படி நடப்பதன் மூலம் சக்தி கிடைக்கும். தந்தையின் கட்டளை என்னவெனில் கூடவே இருங்கள், இருப்பினும் தூய்மையாக இருக்க வேண்டும். முன்பு கணவன் மனைவி கூடவே இருக்கும் பொழுது நெருப்பு பற்றிக் கொண்டது. தந்தை கூறுகின்றார் - கூடவே இருந்தாலும் நெருப்பு பற்றிக் கொள்ளக் கூடாது. நல்லது.

இனிமையிலும் இனிய செல்லக் குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) உள்ளப்பூர்வமாக தந்தையை நினைவு செய்து பிராப்திக்கான (ஆஸ்தி) குஷியில் இருக்க வேண்டும். முழுமையாக தூய்மையாக கண்டிப்பாக ஆக வேண்டும்.

2) ஆத்மா எவ்வளவு சிறியதாக இருக்கின்றது. மேலும் அதனுள் எவ்வளவு அழிவற்ற பாகம் அடங்கியிருக்கின்றது என்று சிந்திக்க வேண்டும். பிந்துவாகி பிந்து தந்தையை நினைவு செய்ய வேண்டும்.

வரதானம்: சுய விருப்பம் மற்றும் திட சங்கல்பத்தின் மூலம் ஒன்று கொடுத்து பல மடங்கு அடையக் கூடிய நன்கு தேர்ந்தவர் ஆகுக.

நன்றாக தேர்ந்த குழந்தைகள் மண் நிறைந்த காய்ந்த அரிசி அவல் கொடுத்து ஒன்றிற்கு பல மடங்கு பாக்கியத்தை உருவாக்கிக் கொள்வர். அவல் மட்டுமே கொடுத்து விட்டு கைமாறாக சர்வசக்திகள், அனைத்து பொக்கி^ங்கள், 36 வகைகளையும் விட அதிகமாக அடைந்து விடுவர். ஆனால் சில குழந்தை கள் அதை கொடுக்கும் நேரத்தில் சுதாமாவைப் போன்று கக்கத்தில் மறைத்து வைத்துக் கொள் கின்றனர். தந்தை அபகரித்து பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அபகரித்து பெற்றுக் கொண்டால் அதற்கு கைமாறாக அந்த அளவிற்கு கிடைக்காது. ஆகையால் சுய விருப்பத்துடன் மற்றும் திட சங்கல்பத்துடன் ஒன்று கொடுத்து பல மடங்கு அடைவது தான் நன்கு தேர்ந்தவர். இவ்வாறு கொடுப்பதில் தான் நன்மை இருக்கிறது.

சுலோகன்: சாட்சியாகி விடுபட்ட நிலையிலிருந்து ஒவ்வொரு விளையாட்டையும்

பார்ப்பவர்கள் தான் சாட்சியாளர்கள் ஆவர்.